DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -35

| | | |
|---|---|---|
| Name | : Dr.ஜெயபாலன் | Caste: |
| Father's Name: | திரு. வெங்கடாசலம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 30th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8, A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**30.01.2024.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு மருத்துவதுறையில் முதுநிலை அறுவைசிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து கடந்த 2009 ஆம் ஆண்டு பணி நிறைவு பெற்றுவிட்டேன். தற்போது தஞ்சாவூரில் வசித்து தனியார் மருத்துவராக தொழில் செய்து வருகிறேன். நான் கடந்த 27.05.2008 அன்று தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் முடநீக்கியல் துறையில் முதுநிலை அறுவைசிகிச்சை மருத்துவராக பணிபுரிந்தபோது சுமார் 40 வயது மதிக்கதக்க ஜானகி, க.பெ.காசிநாதன்(லேட்) என்ற நோயாளியை, மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தவரை துறை தலைவரின் அனுமதியின் பேரில் மேற்படி மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடித்து விடுவிப்பு செய்தேன்.

மேற்படி நோயாளிக்கு அவரது வலது முன் கையில் ரேடியஸ் எலும்பும், இடது

முன்கையில் அல்னா எலும்பும், இடது தோளில் கிளாவிக்கல் எலும்பும் முறிந்து இருந்தது. அக்காயங்கள் கொடுங்காயங்கள் ஆகும்.

மேற்படி நோயாளிக்கு நான் மேலே சொன்னவாறு மூன்று எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருந்தது என்ற சங்கதியானது நுண்கதிர் பிரிவு மருத்துவர் திருமதி.மைதிலி என்பவராலும் சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி காயங்கள் கொடுங்காயங்கள் என்று கருத்து தெரிவித்து என்னால் வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.38. ரேடியாலஜிஸ்ட் மருத்துவர் மைதிலி என்பவரால் கொடுக்கப்பட்ட ரேடியாலஜிஸ்ட் ரிப்போர்ட் என்னால் வழங்கப்பட்ட காயச்சான்றின் பின்புறம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி ரேடியாலஜிஸ்ட் மைதிலி என்பவர் என்னுடன் பணிபுரிந்தார். எனவே அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சியமானது. அதன் அடிப்படையில் தான் அவரால் வழங்கப்பட்ட சான்று குறித்து சாட்சியம் அளிக்கிறேன். ரேடியாலஜிஸ்ட் ரிப்போர்ட் அ.சா.ஆ.39.

இந்த வழக்கு சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல்துறையினர் என்னை என்றைய தினம் விசாரித்தார்கள் என்று நினைவில்லை. மேற்படி நோயாளி தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் கடந்த 16.05.2008 அன்று மாலை 6.00 மணிக்கு அவசர சிகிச்சை பிரிவிற்கு வந்திருக்கிறார். அவரை பொறுத்து கொடுக்கப்பட்ட விபத்து பதிவேட்டு எண்.1194182. சாட்சி மாற்றி மேற்படி விபத்து பதிவேட்டு எண்.2365729 என்று சொல்லுகிறார். விபத்து பதிவேட்டு எண்.1194182 என்பது ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் மேற்படி நோயாளிக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு எண்ணாகும்.

நான் மேற்படி நோயாளிக்கு தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த சமயத்தில் தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டின் அசல் என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. பொதுவாக நோயாளியின் மருத்துவசிகிச்சை குறிப்பில் விபத்து பதிவேட்டு நகலின் 3 வது நகல் ஒட்டப்படும். போலிசார் என்னை விசாரித்தபோது நோயாளியின் மருத்துவசிகிச்சை

குறிப்பை நான் அவர்களிடம் நான் ஒப்படைக்கவில்லை. விடுவிப்புசான்றையும் நான் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நோயாளிக்கு நான் தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை வழங்கிய போது மேற்படி நோயாளியை பொறுத்து ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலை நான் வாங்கி பார்வையிடவில்லை.

பொதுவாக விபத்து பதிவேட்டு நகலில் ஒரு நோயாளி எங்கு வைத்து எத்தனை மணிக்கு தாக்கப்பட்டார் என்பதும், அவருக்கு என்னென்ன காயங்கள் இருந்தது என்ற சங்கதியும் எழுதப்படும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் மேற்படி நோயாளியை பொறுத்து பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலில் சம்பவம் ஆனது 16.05.2008 அன்று பகல் 11.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த ஆவணத்தில் மேற்படி நோயாளி 35 நபர்களால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நோயாளின் விவரமானது ஜானகி, க.பெ.காசிநாதன், மேலத்தெரு, வங்குடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நோயாளியின் வயது 40 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தபோது மேற்படி நோயாளி சம்மந்தமாக எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்களை நான் அவர்களிடம் ஒப்படைக்கவில்லை.

6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

35 நபர்கள் சேர்ந்து மேற்படி நோயாளியை தாக்கியிருந்தால் அவருக்கு இன்னும் கடுமையான காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றால் அதுபற்றி என்னால் கருத்து கூற முடியாது.

**3, 8 மற்றும் 13 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.